தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

# அரசு உறுதிமொழிக் குழு

## (1995 - 96)




(பத்தாவது சட்டமன்றப் பேரவை)

முப்பத்து மூன்றாவது அறிக்கை

சட்டமன்றப் பேரவைச் செயலகம்
சென்னை-600 009.

பொருளடக்கம்


பக்கங்கள்

குழுவின் அமைப்பு .. iii

அறிக்கை

(i) முகவுரை .. v

(ii) குழுவின் கூட்டங்கள் .. v

(iii) குழுவின் ஆய்வுப் பயணம் .. v

(iv) பொதுக் குறிப்புரைகள் .. vi

இணைப்புகள்

1. 1995—96 ஆம் ஆண்டிற்கான குழுவால் நிறைவேற்றப் பட்டதாக அல்லது படித்துப்பதிவு செய்யப்பட்டதாக கருதப்பெற்ற உறுதி மொழிகளின் துறை வாரியான விவரம் 1—14

2. அளிக்கப்பெற்ற உறுதிமொழிகள், அவற்றுள் நிறைவேற் றப்பெற்றவை அல்லது படித்துப் பதிவு செய்யப் பெற்றவை மற்றும் நிலுவையில் உள்ள உறுதிமொழிகள் குறித்த ஆண்டு வாரியான பட்டியல். 15

3. நிலுவையில் உள்ள உறுதிமொழிகள், குறித்த துறைவாரி யான மற்றும் ஆண்டு வாரியான பட்டியல். 16—17

4. குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம் 18

5. நிறைவேற்றப் பெற்ற / படித்துப் பதிவு செய்யப்பெற்ற உறுதி மொழிகளின் சதவீதம் 19



வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**1995—96 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் அமைப்பு.**

*(20—6—1995 ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது.)*

**தலைவர்**

1. திரு. ஆர். சிங்காரம்

**உறுப்பினர்கள்**

2. திரு. ஆர். சுப்புரத்தினம்
3. திரு. சிங்கை கோவிந்தராசு
4. திரு. க. பழனிசாமி
5. திரு. என். ஆர். சிவபதி
6. திரு. ஏ. டி. செல்லச்சாமி
7. திரு. ஜெ. பன்னீர்செல்வம்
8. திரு. வே. பெரியசாமி
9. டாக்டர் ச. சுந்தரராஜ்
10. திரு. ஆ. பாலையா
11. திரு. எ. தெய்வநாயகம்
12. திரு. எஸ். எஸ். ராமசுப்பு

**செயலகம்**

திரு. செ. சு. ஜானகிராமன். செயலாளர்.

திரு. வெ. இராசாராமன்., இணைச் செயலாளர்.

திருமதி நா. துளசிபாய், சார்புச் செயலாளர்.

அரசு உறுதிமொழிக் குழு

(பத்தாவது சட்டமன்றப் பேரவை)

முப்பத்து மூன்றாவது அறிக்கை.

பெறுநர் :
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை,
சென்னை.

(i) முகவுரை

1. 1995—96 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) முப்பத்து மூன்றாவது அறிக்கையை பேரவைக்கு எளிக்கிறேன்.

2. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளில் 248 (1) ஆம் விதியின் கீழ் 1995..96 ஆம் ஆண்டிற்கான குழு, 1995 ஆம் அண்டு ஜூன் திங்கள் 20 ஆம் நாளன்று மாண்பமிகு பேரவைத் தலைவர் அவர்களால் நியமனம் செய்யப்பெற்றது.

(ii) குழுவின் கூட்டங்கள்

3. குழு, 1995—96 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 29 ஆம் நாளன்று சென்னையில் கூடிய தனது முதல் கூட்டத்தில் ஏற்கெனவே நிலுவையாக உள்ள உறுதிமொழிகள் குறித்து அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றி ஆய்வு செய்யலாம் என முடிவெடுக்கப் பட்டது.

4. குழு, சென்னை மற்றும் இதர மாவட்டங்களில் கூடிய நாட்கள் பற்றிய விவரம் இணைப்பு—I இல் கொடுக்கப்பட்டுள்ளது.

5. பேரவையில் அமைச்சர்களால் கொடுக்கப்பெற்று ஏற்கெனவே நிலுவையாக உள்ள உறுதிமொழிகள் குறித்து அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை களை குழு மேற்படி கூட்டங்களில் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது. நிறைவேற்றப் பெறாத உறுதிமொழிகள் குறித்து சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு ஆய்வுப் பயணம் மேற்கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட உதிகாரிகளை நேரில் கலந்தாலோசித்து விவரங்களை சேகரித்தது. மேலும், செயலகத்தில் பல வேறு துறைகளைச் சார்ந்த அரசுச் செயலாளர்கள் மற்றும் இதர அதிகாரிகளைச் சென்னையில் நடைபெற்ற கூட்டங்களில் கலந்தாலோசித்து நெருடித் தவல்களைக் குழு ரெட்டியது. இவ்வகையில் குழு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசுத் துறை செயலாளர்களுடன் அளைத்து உறுதிமொழிகள் குறித்தும் கலந் துரையாடியது. நிறைவேற்றப்பெற்றனவாக இவ்வது படித்துப் பதிவு செய்யப்பெற் றனவாக குழுவினால் கருதப்பட்ட உறுதிமொழிகள் பற்றிய விவரங்கள் இணைப்பு—IIல் கொடுக்கப்பெற்றுள்ளன.

6. இவ்வறிக்கையில் வட ஆர்காடு அம்பேத்கார், திருவண்ணாமலை சம்புவராயர் விழுப்புரம் இராமசாமி படையாச்சியார், நாகை காயிதேமில்லத், தென்னார்காடு வள் ளலார், தருமபுரி மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்கள் குறித்த உறுதிமொழிகள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

(iii) குழுவின் ஆய்வுப் பயணம்

7. உறுதிமொழி எண் 28/5/94—திருப்பத்தூரிலுள்ள மாருதி டெதர்ஸ் ஆலையிலி ருந்து வெளிவரும் நீர் ஊருகில் உள்ள கிராமத்தில் சுகாதாரக்கேடு விளைவிப்பதை தடுக்க சிறப்பு ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை கண்டறிய 25—10—95 அன்று ஆய்வு மேற் கொண்டது. இந்நிறுவனம் பாதி அளவு பதனிடப்பட்ட தோலை வாங்கி வந்து அதை முழுமையாகப் பதனிடும் பணியை செய்கறது. அவ்விதம் செய் வதன் மூலம் நிறைய தாய்மைக்கேடு ஏற்படாமல் உள்ளது. இங்கு தோலுக்கு சாயம் தோய்க்கப்படுகிறது. தோலை முழுமையாக சுத்தம் செய்வதற்கு சுத்திகரிக்கும் நிலையம் (Treatment Plant) கட்ட இருக்கிறார்கள். தற்சமயம் கழிவுநீர் பாலினில் டேங்க் மூலம் சுத்திகரிக்கப் படுகிறது. இதுபோன்று ஆலைகளில் வெளியேறும் கழிவு நீரை சுத்திகரிக்க பொதுவாக ஒரு இடத்தை தெரிவு செய்ய இருப்பதாகவும்தெரிவு செய்த பின்னர் விரும்பு பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (Common Treatment Plant) அமைத்து இந்த கழிவு நீர் எல்லாம் சுத்திகரிக்கப்படும் என்றும் மாவட்ட சுற்றுச் சூழல் நல பொறியாளர் தெரிவித்துள்ளார். சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரை விவசாயத் திற்கு பயன்படுத்தி ஆய்வு செய்யப்பட்டதா என விசாரித்த போது அதில் வெடியம் பொருட்கள் கலந்திருப்பதால் அதனை விவசாயத்திற்கு பயன்படுத்த வாரியம் அனுமதிக்கவில்லை என்று பொறியாளர் கூறினார். உச்சநீதிமன்றம் விதித்துள்ள காலகெடுவிற்குள் இயந்திர நிலையம் நிறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று குழு அறிவுறுத்தியது.

*8.* உறுதிமொழி எண். 159/95 கள்ளக்குறிச்சியில் இரண்டு கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நிர்மாணப்பணி முடிந்து எப்போது செயல்படத் துவங்கும் என குழு விசாரித்தபோது, 17.82 கோடிக்கு இயந்திரங்கள் வாங்க 25.5.94 இல் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது என்றும், அதற்காக 8 கோடி ரூபாய் இயந்திரங்கள் சப்ளை செய்யும் நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றும் மேலும் 19.10.95 அன்று 9 கோடிக்கு மேல் டெண்டர் கோரப்பட்டுள்ளதென்றும் இன்னும் சில நாட்களில் பணி துவங்கப்படும் எனவும் மேலும் இத்திட்டப்பணியை முடிக்க 18 மாதங்கள் ஆகும் எனவும், மேலாண்மை இயக்குநர் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

*9.* உறுதிமொழி எண். 173/91 தொடர்பாக கடலூர் சிப்காட் வளாகத்தை 15.11.95 அன்று குழு பார்வையிட்டது. இது ஸ்பிக் பார்மா, டேன்பெட் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் போன்ற பல நிறுவனங்களைக் கொண்ட வளாகம். ஸ்பிக் பார்மா, ஸ்பிக் நிறுவனத்தினுடைய ஒரு பிரிவு ஆகும். 1995 ஏப்ரலிருந்து இங்கு பெண்சிலின் தயார் செய்யப்படுகிறது. இன்னும் 6 மாதங்களில் மேலும் ஒரு பிளாண்ட் (Plant) போடப்படும். இங்கு 320 பேர் வேலை செய்கிறார்கள். டேன்பெட் இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் பிர்லா குரூப் கம்பெனி, இங்கு அலுமினிய டேபிளோரட் போன்ற பொருட்கள் உற்பத்திச் செய்யப்படுகிறது. இப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இது போன்ற பொருட்களைத் தயார் செய்யும் கம்பெனி இந்தியாவிலேயே இரண்டு தான் உள்ளது.

சிப்காட் வளாகத்தை விரிவு படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கருத்தறியப்பட்டது. முதல் கட்டமாக 518.79 ஏக்கர் நிலத்தில் பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு 58 யூனிட்டுகள் வரக்கூடிய நிலையில், 58 யூனிட்டுகள் வந்து உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றன. 13 யூனிட்டுகள் கட்டிடம் கட்டும் தருவாயில் உள்ளன. 7 யூனிட்டுகளுக்கு கட்டிடம் கட்டுவதற்கு இடம் ஒதுக்கப்பட்டதும் இரண்டு வருடகாலம் அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த சிப்காட் வளாகம் வந்த பிறகு இரண்டு கிராமங்களில் சுமார் 200 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. எனவே, சுற்றுப்புற சூழ் நிலையை பாதுகாப்பதற்கான ஒவ்வொரு தொழிற்சாலையும் சுத்திகரிப்பட்ட நீரை ஒன்று சேர்த்து ஒட்டு மொத்தமாக ஒரு குழாய் மூலம் கடலில் கலக்கும் ஒரு திட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. சுற்றுப்புற சூழ் நிலை பாதுகாப்பதற்கான ஒவ்வொரு தொழிற்சாலையும் சுத்திகரிப்பட்ட நீரை ஒன்று சேர்த்து ஒட்டு மொத்தமாக ஒரு குழாய் மூலம் கடலில் கலக்கும் ஒரு திட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. சுற்றுப்புற சூழ் நிலையை பாதுகாப்பதற்கான ஒவ்வொரு தொழிற்சாலையும் சுத்திகரிப்பட்ட நீரை ஒன்று சேர்த்து ஒட்டு மொத்தமாக ஒரு குழாய் மூலம் கடலில் கலக்கும் ஒரு திட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. சுற்றுப்புற சூழ் நிலையை பாதுகாப்பதற்கான ஒவ்வொரு தொழிற்சாலையும் சுத்திகரிப்பட்ட நீரை ஒன்று சேர்த்து ஒட்டு மொத்தமாக ஒரு குழாய் மூலம் கடலில் கலக்கும் ஒரு திட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. சுற்றுப்புற சூழ் நிலையை பாதுகாப்பதற்கான ஒவ்வொரு தொழிற்சாலையும் சுத்திகரிப்பட்ட நீரை ஒன்று சேர்த்து ஒட்டு மொத்தமாக ஒரு குழாய் மூலம் கடலில் கலக்கும் ஒரு திட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. சுற்றுப்புற சூழ் நிலையை பாதுகாப்பதற்கான ஒவ்வொரு தொழிற்சாலையும் சுத்திகரிப்பட்ட நீரை ஒன்று சேர்த்து ஒட்டு மொத்தமாக ஒரு குழாய் மூலம் கடலில் கலக்கும் ஒரு திட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. சுற்றுப்புற சூழ் நிலையை பாதுகாப்பதற்கான ஒவ்வொரு தொழிற்சாலையும் சுத்திகரிப்பட்ட நீரை ஒன்று சேர்த்து ஒட்டு மொத்தமாக ஒரு குழாய் மூலம் கடலில் கலக்கும் ஒரு திட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. சுற்றுப்புற சூழ் நிலையை பாதுகாப்பதற்கான ஒவ்வொரு தொழிற்சாலையும் சுத்திகரிப்பட்ட நீரை ஒன்று சேர்த்து ஒட்டு மொத்தமாக ஒரு குழாய் மூலம் கடலில் கலக்கும் ஒரு திட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இவ்வொன்றிய பயன்பாட்டுக்கு வேண்டிய தண்ணீரை நகராட்சியிடம் இருந்து பெறப்படுகிறது. எனவே, நகருக்கு பாதிப்பு ஏற்படும் என்ற நிலையில் தான் தனியாக இதற்கென திட்டம் வகுத்து தண்ணீர் வழங்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது. தற்போது 1 ஹெக்டேருக்கு இருபத்தைந்தாயிரம் லிட்டர் பால் கொள் முதல் செய்யப்படுகிறது. இதற்குத் தேவையான நீரை நேரடியாக நீர்த்தேக்கத்திலிருந்து பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஏனெனில் இவ்வூரில் நிலத்தடிநீர் உப்பு நீராக உள்ளதால் பொருட்டு பாலுக்கு ஆற்று நீரையேபயன்படுத்த வேண்டியுள்ளது. கடின நீரை மிருதுவாக்குகிற பிளாண்ட் (plant) வைக்கப்பட்டுள்ளது என்றும் அதன் மூலம் அனைத்து நீரையும் மிருதுவாக்க இயலாததினால் இது குறித்து குடிநீர் வடிகால் வாரியத்திற்கு ஒரு செய்ற்குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. வாரியத்திடமிருந்து மதிப்பீடுகள் பெற்ற பின்னர் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

## (IV) பொதுக் குறிப்புரைகள்.

*11.* (i) அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள், அதிகாரிகள் மற்றும் அரசுச் செயலாளர்களைக் குழு நேரில் சந்தித்து ஒவ்வொரு உறுதிமொழியின் மீதும் எடுத்த நடவடிக்கை குறித்து விசாரித்தது. குழு இந்த ஆண்டில் 23 மாவட்டங்களில் ஆய்வு பயணம் மேற் கொண்டது. மேலும், இந்த ஆண்டில் (1995—96) 29 நாட்கள் வரை குழு கூடியது. இனி வருங்காலத்தில் பெருமளவிலான உறுதிமொழிகள் கால விரயமின்றி மாவட்ட ஆளவியே நிறைவேற்றப்படவும் தேக்க நிலையினைத் தவிர்க்கவும், உறுப்பினர்கள் எதிர்பார்க்கும் பலன் மக்களை துரிதமாகச் சென்றடையவும் இக்குழு முன்னர் வகுத்த வழிமுறையையே (Guide lines) பின் பற்றுகிறது.

(ii) டல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் குறிப்பாக தலைநீர் வேளை வாய்ப்பு திட்டம், பரவல் ஆக்கும் திட்டம், வேலைவாய்ப்பு உத்திரவாதத் திட்டம், ஊராட்சி பொது நிதி மூலமாக நிறைவேற்றப்படுகின்ற திட்டங்கள், பஞ்சாயத்து நிதியிலிருந்து நிறை வேற்றப்படுகின்ற திட்டங்கள் குறித்த உறுதிமொழிகளுக்கு அந்த தந்த நிதி ஆண்டுகளில் முன்னுரிமை கொடுத்துச் சேர்த்துக் கொள்ளவும், அதற்கான பதிலை 15 நாட்களுக்குள் பெறவும், துறைச் செயலாளர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்குமாறு குழு பரிந்துரை செய்கிறது.

(iii) பேரவையில் எழுப்பப்படும் உறுதிமொழிகளின் மீது குறிப்பிட்ட கால எல்லைக்குள் நடவடிக்கைகள் முற்றுப்பெற வேண்டும் என்பதை குழு வலியுறுத்துகிறது.

(iv) குழுவின் பணிக்கு உதவும் வகையில் திறனுடனும், பயன் மிக்க வகையிலும் பணியாற்றிய செயலாளர், இணைச் செயலாளர், அலுவலர்கள் மற்றும் உறுதிமொழிக் குழுவின் செயலகப் பணியாளர்கள் அனைவரை குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் இச்சமயத்தில் பாராட்ட விழைகின்றனர்.

12. குழுவின் இந்த அறிக்கைக்கு 1996 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15 ஆம் நாளன்று நடைபெற்றக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பெற்றது.

சென்னை—600 009,
15—2—1996,
மாசி 3, யுவ,
திருவள்ளுவர் ஆண்டு 2027.

ஆர். சிங்காரம்,
தலைவர்.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

## இணைப்பு-1.

1995-96 ஆம் ஆண்டிற்கான குழுவால் நிறைவேற்றப்பெற்றனவாக ஏற்கப்பட்டது படித்துப் பதிவு செய்யப்பெற்றனவாக முடிவு செய்யப்பட்ட உறுதிமொழிகள் குறித்த துறை வாரியான விவரம்.

### வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம்

உள் துறை

| வ. எண். | உறுதிமொழி எண். | பேசுபொருள். | பொருள். | அரசு எடுத்துள்ள நடவடிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | 17/95 | உடுக்குறியிட்ட வினா எண் 33325, துணை வினா, டாக்டர் ஜே. பரந்தாமன், எம்.எல்.ஏ., 16—3—1995. | வாணியம்பாடி வட்டம், ஆம்பூரில் உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதிடம் உள்ளதா என்பது குறித்து. | மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உறுதிமொழிக் கிணங்க வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், ஆம்பூரில் ஒரு உரிமையியல் நீதிமன்றம் ஏற்படுத்துவதற்கான ஆணைகள் உள்துறையின் 20-6-1995 நாளிட்ட அரசாணை நிலை எண். 903-இல் வெளியிடப்பட்டுள்ளது.<br><br>(கடித எண். 56956/பி/ப்பி/95-4, நாள் 13—12—1995.) |
| 2 | 117/95 | உடுக்குறியிட்ட வினா எண். 23304, துணை வினா, திரு. ஏ. கே. ஐ. சுந்தரவேல், எம்.எல்.ஏ., 18—4—1995. | திருப்பத்தூர் இளைச் சிறைச்சாலையை விரிவுபடுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பது குறித்து. | திருப்பத்தூர் இளைச் சிறைச்சாலையில் பெண் சிறைவாசிகளுக்கு தனியாக கழிவறை கட்டிடம் கட்டும் பணி முடிக்கப்பட்டதுடன். இளைச் சிறையின் உட்புறம் திறந்த வெளியிடங்களுக்கு கம்பி வலை செய்து மூடப்பட்டு, சுற்றுச் சுவரும் உயர்த்திக் கட்டப்பட்டுள்ளது.<br><br>(கடித எண். 56956/பி/ப்பி./95-4, நாள் 13-12-1995) |

ஊரக வளர்ச்சித் துறை.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 3 | 6/95 | உடுக்குறியிடாத வினா எண். 22572 திரு. ஏ. கே. ஐ. சுந்தரவேல், எம்.எல்.ஏ., 14—3—1995. | கந்தினி நாட்டாம்பள்ளி, தோலாம் பேட்டை திருப்பத்தூர் ஒன்றியங்களில் பெரும்பாலான பஞ்சாயத்துக்களில் மயானப் பாதை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து. | வடாற்காடு அம்பேத்கார் மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டுள்ளது. 1993-94, 1994-95 ஆகிய ஆண்டுகளில் 24 இடங்களில் மயானப் பாதை முடிக்கப்பட்டு 1995-96 இல் 8 இடங்களில் மயானப் பாதை வேலைகள் நடைபெற்று வருகின்றன.<br><br>(நே.மு.க. எண். 44073/ஐ3/95-5, நாள் 12-12-95) |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | 14/95 | உடுக்குறியிடாத வினா எண். 3849 4, டாக்டர் ஜெ. பரந்தாமன், எம்.எல் ஏ., 14—3—1995. | வட ஆற்காடு மாவட்டம், வாணியம்பாடி வட்டத்திற்குட்பட்ட அறநிலையத் துறைப் பகுதிகள் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளதை மாற்றி வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்திற்கு மீண்டும் மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து. | திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் இணைக்கப்பட்டிருந்த வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், வாணியம்பாடி வட்டத்திற்குட்பட்ட அறநிலையத்துறை பகுதிகளை மீண்டும் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்ட இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உதவி ஆணையர் ஆட்சி எல்லைக்கு கொண்டு வந்து இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரால் 11-11-1994-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் 1—12—1994 முதல் அமுலபடுத்தப்பட்டுள்ளது. |

(கடிதஎண். 42980/ஜி-1/95-2, நாள் 12—12—95.)

## வருவாய்த் துறை

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 5 | 198/92 | உடுக்குறியிட்ட வினா எண் 4005, துணை வினா திருமதி கே. எம். கலைச்செல்வி. எம்.எல்.ஏ., 26—3—1992, | குடியாத்தம் காட்பாடியிலிருந்து 35 கிலோ மீட்டர் தூரம் உள்ளதால் காட்பாடியை தனித் தாலுக்காவாகப் பிரித்துத் தரவேண்டும் என்று வேண்டி அதற்கு இந்த அரசு ஆணை செய்யுமா என்பது குறித்து. | காட்பாடி ஒரு சிறு கிராமம், காட்பாடிக்கு முன்னதாக தாராபட வேடு, கழிஞ்சூர், காங்கேயநல்லூர், காட்பாடி நகர் விரிவு மற்றும் விருதம்பட்டு ஆகிய கிராமங்களில் புதியதாக ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டப்பட்டு பெரிய நகரமாக உருவாகி வருகின்றது. இந்நிலையில் காட்பாடியை மட்டும் வேலூர் வட்டத்துடன் சேர்த்தால் மேற்கண்ட பகுதிகளி மக்கள் தலைமையிடம் செல்ல சுமையாத்தம் தான் செல்ல வேண்டியதாகும், எனவே, காட்பாடி, காட்பாடியைச் சேர்ந்த கிராமங்களை வேலூர் வட்டத்துடன் சேர்க்க நடவடிக்கை தேவையில்லை என்று அரசு முடிவெடுத்துள்ளது. | துறையில் பதிலை ஆய்ந்த குழு இப்பொருள் குறித்து மேல் நடவடிக்கை தேவையில்லை என முடிவு செய்தது, |

(அ.சா.கு. எண். 7812/எக்ஸ்1/95-6, நாள் 13—12—1995.)

திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம்.

கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறை.

| வரிசை எண். | உறுதி மொழி எண். | பார்வை. | பொருள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 6 | 24/95 | உடுக்குறியிட்ட வினா எண். 21325, துணை வினா திரு. தா. வேடியப்பன், எம்.எல்.ஏ., 17-3-1995. | போளூர் வட்டம். போளூரில் பால் குளிரூட்டும் நிலையம் நிருவ ஆரிடம் செயற்குறிப்பு உள்ளதா ? என்பது குறித்து, |

| அரசு எடுத்துள்ள நடவடிக்கை. | குழுவின் குறிப்புரை. |
|---|---|
| (5) | (6) |
| தற்போது போளூர் வட்டத்தில் நாள் ஒன்றுக்கு சுமார் 30,000 முதல் 35,000 லிட்டர் வரை பால் கொள்முதல் செய்யப்படுகிறது. போளூரிலிருந்து கீழ்க்கண்ட தூரங்களில் பிற பால் குளிரூட்டும் நிலையங்கள்/பால் பதப்படுத்தும் நிலையம் உள்ளன. | துறையின் பதிலை ஆய்ந்த குழு இப் பொருள் குறித்து மேல் நடவடிக்கை தேவ யில்லை என முடிவு செய்தது. |

1. திருவண்ணாமலை பால் குளிரூட்டும் நிலையம் ... 35 கி.மீ.
2. அனக்காவூர் பால் குளிரூட்டும் நிலையம் ... 58 கி.மீ.
3. வேலூரிலுள்ள சத்துவாச்சாரி பால்பண்ணை ... 48 கி.மீ.

மேலும் 3-வது பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட பால் குளிரூட்டும் நிலையங்களில் குளிரூட்டும் திறன் மேம்படுத்தப்பட்டவாறு விரிவாக்கம் செய்யப்பட்டது.

(நாளொன்றுக்கு)

1, திருவண்ணாமலை .. 30,000 லிட்டரிலிருந்து 1.00 லட்சம் லிட்டர்
2, அனக்காவூர் .. 30,000 லிட்டரிலிருந்து 60,000 லிட்டர்.
3, ஆரணி .. 30,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டர்.

இத்துடன் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் பாலை குளிர்விக்கும் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் ஒன்று கொடக்கல்லில் அமைக்கப்பெற்று, 16—6—1995லிருந்து இயங்கி வருகிறது.

வேலூரிலுள்ள சத்துவாச்சாரி பால்பண்ணையில் பால் பதப்படுத்தும் திறன் வடாற்காடு மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய நிதி மூலம் நாளொன்றுக்கு 70,000 லிட்டரிலிருந்து 1.50 இலட்சம் லிட்டராக உயர்த்தப்பட்டுள்ளது.

போளூர் வட்டத்தில் கொள்முதல் செய்யப்படும் பால், திருவண்ணாமலை, அனக்காவூர் பால் குளிரூட்டும் நிலையங்களுக்கும், மற்றும் சத்துவாச்சாரி பால் பண்ணைக்கும் அனுப்பப்பட்டு அங்கு குளிரூட்டப்படுகிறது/பதப்படுத்தப்படுகிறது. போளூருக்கு அருகிலுள்ள பால் குளிரூட்டும் நிலையங்களின் குளிரூட்டும் திறனும், பால் பண்ணையின் பால் பதப்படுத்தும் திறனும் நிகரித்துள்ளதால், போளூர் வட்டத்தில் தற்போதும் மற்றும் வருங்காலங்களிலும் கொள்முதல் செய்யப்படும் பாலை குளிர்விக்க, பதப்படுத்த எவ்வித இடையூறும் இல்லை, ஆகவே, போளூர் வட்டத்தில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.

(அ.சா.கு. எண். 36955/ஏ&பி/95-6 நாள் 14—12—1995.)

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 7 | 177/95 | பால்வளத்துறை மானியக் கோரிக்கையில் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை. நாள் 17—4—1995. | போளூர் வட்டத்தில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு கறவை மாடு வாங்க கடனுதவி வழங்க அரசு ஆவன செய்யுமா? எனபது குறித்து | "தாட்கோ" திட்டத்தின் கீழ் அரசு நிர்ணயித்த குறியீட்டளவிற்கு முன்னுரிமை அடிப்படையில் மானியத்துடன் கூடிய கறவை மாட்டுக்கடன் வழங்க ஆவன செய்யப்படுகிறது.<br><br>மேலும், தேசிய மயமாக்கப்பட்ட மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும், மானியம் மற்றும் மானியம் அல்லாத கறவை மாட்டுக் கடன் மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு அவர்களின் கேட்புரையின் பேரில் வழங்க ஆவன செய்யப்படுகிறது.<br><br>போளூர் வட்டத்தில் உள்ளடங்கிய கிராமங்களில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 32 மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் இயங்குகின்றன.<br><br>மேற்குறிப்பிட்ட சங்கங்களில் இருந்து கறவை மாடுகள் வாங்க கடன் கேட்டு வந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 348 ஆகும். இந்த 348 விண்ணப்பதாரர்களும் கறவை மாடுகள் வாங்க கடன் வழங்கப்பட்டு அதன் மூலம் பயன் அடைந்துள்ளார்கள். |
| | | | | (அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 25142/பா.உ.2/95-15, நாள் 16—11—1995.) |
| | | கைத்தறிகள், கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர் துறை. | | |
| 8 | 179/95 | உடுக்குறியிட்ட வினா எண். 33334, துணை வினா—டாக்டர் பெ. வீரபாண்டியன். எம்.எல்.ஏ., 27—4—1995. | செங்கம் தொகுதி, பரமனந்தல் கிராமத்தில் "தாட்கோ" கட்டிடத்தில் இயங்கும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய கிராமிய நூற்பு நிலையத்தில் 25 மெரிகோட்ஸ் பழுதடைந்து இருப்பதால் அதை சரிசெய்ய அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து, | செங்கம் தொகுதி, பரமனந்தல் கிராமத்தில் இயங்கும் கிராமிய நூற்பு நிலையத்தில் உள்ள பழுதடைந்த இராட்டைகள் அனைத்தும் பழுது நீக்கம் செய்யப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. |
| | | | | (கடித எண். 18403/டி-1/95-4 நாள் 12—12—95.) |
| | | போக்குவரத்துத் துறை | | |
| 9 | 185/95 | உடுக்குறியிட்ட வினாஎண், 36590—திரு. தா. வேடியப்பன். எம்.எல்.ஏ., 2—5—1995. | போளூரில் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகப் பணிமனை ஏற்படுத்துவது குறித்து. | போளூரில் பணிமனை கட்டுவதற்காக 4.77 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளது. பணிமனை கட்டுமானப் பணிகளுக்கான இட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. |
| | | | | (கடித எண், 32100/ஜே.1/95-3. நாள் 14—12—95.) |

## விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம்

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,

| வரிசை எண். | உறுதி மொழி எண். | பார்வை. | பொருள். | அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய விவரம். |
|---|---|---|---|---|
| 1) | (2) | (3) | (4) | (5) |
| 10 | 130/95 | உடுக்குறியிட்ட வினா எண், 21650. துணை வினா— திரு. என், ஆர், இராஜேந்திரன். எம்.எல்.ஏ,. 19—4—1995. | காட்டுமன்னார்கோவில் குமராட்சி ஒன்றியம். மேலவள்ளியூரிலுள்ள ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு ஆவனசெய்யுமா என்பது குறித்து, | காட்டுமன்னார்கோவில் தொகுதி. குமராட்சி ஒன்றியம், மேலவள்ளியூரிலுள்ள ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆணை (நிலை) 166.. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை. நாள் 10—11—1994ல்ஆணைவெளியிடப்பட்டுள்ளது. |
| | | | பொதுப்பணித்துறை | |
| 11 | 186/95 | உடுக்குறியிட்ட வினா எண், 22583. திரு, வி, கப்பிரமணியம். எம்,எல்,ஏ,. 2—5—1995, | விக்கிரவாண்டி ஒன்றியம். இராதாபுரம் கிராமத்தையும் வாக்கூர் கிராமத்தையும் இணைக்கிற வகையில் பாண்டி வாய்க்காவின் குறுக்கே பாலம் கட்டுதல் குறித்து, | இராதாபுரம் வாக்கூர் சாலை (ஊராட்சி ஒன்றிய சாலை) கி,மீ, 0/2 ல் பாண்டி வாய்க்காலின் குறுக்கே பாலம் அமைக்கும் பணி மக்களுக்குப் பாலங்கள் கிட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு தற்போது பணி நடைபெற்று வருகிறது, தற்போது இப்பாலத்திற்கான மூடு பலகை அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது, மீதமுள்ள அணுகுசாலை கைப்பிடி சுவர்கள் மற்றும் கட்டளதளம் அமைக்கும் பணிகள் யாவும் முடிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன, |
| | | | | (நே.மு.க.எண் 40049/ஜ 1/95-10. நாள் 8-12-95) |

### நாகை காயிதே மில்லத் மாவட்டம்.

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை.

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | 56/95 | உடுக்குறியிட்ட வினா எண். 25088— திரு. எஸ். ஆசைமணி, எம்.எல்.ஏ., 30—8—1995. | நாகப்பட்டினம் மாவட்டம். குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மாந்தக்குடி அய்யம்பேட்டை ஊராட்சி விவேகானந்தா உதவி தொடக்கப்பள்ளிக்கு நிரந்தர சத்துணவுக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து. | நாகை காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மாந்தக்குடி அய்யம்பேட்டை ஊராட்சி விவேகானந்தா உதவி தொடக்கப்பள்ளி, தஞ்சியார் பள்ளி ஆனதால், அரசு செலவில் சத்துணவு கட்டிடம் கட்டித்தர இயலாது. |
| | | | பொதுப்பணித்துறை | |
| 13 | 90/93 | உடுக்குறியிடாத வினா எண். 1517— திரு. வெ. தம்புசாமி, எம்.ஏல்.ஏ., 17-3-1993. | திருவாரூர் வட்டம், சீவனூர் ஒன்றியம், சீவனூர் ஓதியந்தூர் வழி எரவாஞ்சேரி சாலை சீர்கெட்டு போக்குவரத்து பாதித்து பொது | பொருளில் குறிப்பிட்டுள்ள சாலையில் மேம்பாட்டுப் பணி விவசாய விளைபொருட்கள் அபிவிருத்தித் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு மேற்படி சாலைப்பணி ஒப்பந்தக்காரருக்கு விடப்பட் |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | | | மக்கள் அவதிப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? சாலை பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து. | டுள்ளது. மேற்குறிப்பிட்ட சாலைப் பணி ஓப் பந்தப்படி முடிக்கப்பட்டுள்ளது. (நே.மு.க. எண். 40049/ஐ1/95-10, நாள் 8—12—1995.) |
| 14 | 191/94 | பொதுப்பணித் துறை மாவிய கோரிக்கையின் மீது நடந்த விவாதத்திற்கு திரு. வே. தம்புசாமி, எம்.எல்.ஏ., விளக்கம் கோருதல், 11—4—1994. | திருத்துறைப்பூண்டி இறவை பாசன பம்புசெட் பழுதடைந்திருப்பதால் சீர்செய்து விவசாயிகளுக்கு பாசனத்திற்கு நீர் வழங்கப்படுமா என்பது குறித்து. | திருத்துறைப்பூண்டி இறவைப் பாசன பம்பு செட்டுகளை பழுது பார்த்து நல்ல நிலையில் வைத்துக் கொள்ளும்படி கண்காணிப்புப் பொறியாளர், தஞ்சை வட்டம், தஞ்சை அவர்களுக்கு தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் ஏற்கனவே அறிவுரைகள் வழங்கியுள்ளார். (நே.மு.க. எண். 40049/ஐ1/95/10, நாள் 8—12—1995.) |
| 15 | 202/94 | பேரவை விதி 55-ன் கீழ் கவனஈர்ப்புத் தீர்மானம் டாக்டர் க. கோபால், எம்.எல்.ஏ., 13—4—1994. | நன்னிலம் தொகுதி, நன்னிலம் செயற்பொறியாளர், உபகோட்டத்தில் அரசலாறின் குறுக்கே அம்மல் கிராமத்தில் கட்டியுள்ள ரெகுலேட்டர் முழுவதும் இடிந்தது குறித்து. | நன்னிலம் தொகுதி, அரசலாற்றின் குறுக்கே அம்பல் கிராமத்தில் கட்டியுள்ள ரெகுலேட்டர் கடந்த டிசம்பர் 1993-ல் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளத்தினால் சேதமடைந்துள்ளது. அவற்றை பதுப்பிக்கும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வேலை முடிவடைந்துள்ளது. (நே.மு.க. எண். 40049/ஐ-1/95-10, நாள் 8—12—1995). |
| 16 | 323/94 | வினா எண். 1665 4— திரு. து. மூர்த்தி, எம்.எல்.ஏ., 3—11—1994. | சிர்காழி தொகுதியில் அவனம் பெருமாள் கோவில், திருநாங்கூர் செல்லும் தார்ச் சாலையை புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து. | இச்சாலையின் சரியான பெயர் அன்னங்கோவில் நாங்கூர் சாலை என்பதாகும். இது 5 கி.மீ. நீளமுள்ள (0/0— 5/0) இதர மாவட்டச் சாலையாகும். இது 3.66 மீட்டர் அகலமுள்ள தார்ச் சாலை ஆகும். இச்சாலையில் 1992-93ல் கி.மீ. 1/6—8, 10 2/2, 4/6 ஆகிய பழுதடைந்த பகுதிகள் சு. 1.35 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்டன. இப்பகுதிகள் தற்பொழுது போக்குவரத்திற்கு ஏற்புடையதாக உள்ளது. (நே.மு.க. எண். 40049/ஐ1/95-10, நாள் 8—12—1995.) |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 17 | 324/94 | வினா எண். 1940..டாக்டர் க. கோபால், எம்.ஏல்.ஏ., | நன்னிலம் தொகுதி, புத்தாற்றில் கரையோரம் மாப்பிள்ளை குப்பம் மற்றும் ஆண்டிப் பந்தல் வரை செல்லும் பேருந்து சாலை பழுதுபட்டுஉள்ளது அரசுக்குத் தெரியுமா என்பது குறித்து. | பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள திருவிடச்சேரி முதல் ஆண்டிப்பந்தல் சாலைத் தடத்தில் கீழ்க்காணும் சாலைப் பகுதிகள் உள்ளன :<br>(1) குடவாசல் நன்னிலம் சாலை கி.மீ. 18/4— 34/2.<br>(2) ஆண்டிப்பந்தல் - நன்னிலம் சாலை கி.மீ. 44/2—38/8.<br>வரிசை எண். 1ல் உள்ள சாலையானது நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணி பராமரிப்பில் உள்ள இதர மாவட்டச் சாலையாகும். அந்த சாலையில் கி.மீ. 33/0—34/0 வரையுள்ள பகுதியில் வெள்ள நிவாரண நிதியின் கீழ் தார் தளம் புதுப்பிக்கப்பட்டது. |

வரிசை எண். 2ல் உள்ள சாலையானது நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணி பராமரிப்பில் உள்ள அரசு முக்கிய மாவட்டச் சாலையாகும். அச்சாலையின் கி.மீ. 41/0—42/2 வரையுள்ள பகுதியை ஆண்டு பராமரிப்பு நிதி மூலம் சீர்செய்ய ரூ. 1.80 இலட்சத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுவிட்டது. மேற்படி இரண்டு சாலைகளிலும் ஏற்கனவே சீரமைக்கப்பட்ட 2.2 கி.மீ. நீள சாலைப்பகுதி போக, மீதமுள்ள 19.0 கி.மீ. நீள சாலைப் பகுதிகளை சீர் செய்ய சுமார் ரூ. 53.00 லட்சங்கள் தேவைப்படும். ஆண்டு பராமரிப்பு நிதியினைக் கொண்டுதான் மேற்படி பணிகளை செயல்படுத்த வேண்டும். எனினும், நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணி துறையின் திட்டம் சாரா பணிகளுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் நிதி குறைவானதாகவே உள்ளதால், பணிகள் அனைத்தையும் ஒரே நேரத்தில் எடுத்துச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. எனினும், இச்சாலைகளில் மிகவும் பழுதடைந்த பகுதிகள் சீர் செய்யப்பட்டுவிட்டன. இதர பகுதிகளில் தார் நெடிகள் போடப்பட்டு வாகனப் போக்குவரத்திற்கு தடையின்றி சாலை பராமரிக்கப்பட்டு வருகின்றது.

(நே.மு.க. எண். 40049/ஜ1/95-10, நாள் 8-12-1995)

## போக்குவரத்துத்துறை

18 373/90 உடுக்குறியிட்ட வினா எண். 2357 துணை வினா திரு. எம். முகமது சித்திக், எம்.எல்.ஏ., 20—4—1990.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் மூலமாக வட்டப்படும் கப்பல், கடலூர் வரை விஸ்தரிக்கப்படுவதாக சொல்லப்படுகிறது. தேரழுந்தூர் சுற்றுலா மையத்திற்கு கப்பல் விடுவதற்கு ரகிடம் திட்டம் உள்ளதா என்பது குறித்து

சென்னையிலிருந்து பாண்டிச்சேரி, கடலூர் மற்றும் முக்கிய தமிழக கடலோர நகரங்களுக்கு சீர் பயணப்படகு போக்குவரத்து ஏற்படுத்துவது தொடர்பாக ஒரு கலந்தாலோசனை தேர்வு செய்ய ஒப்பந்தப் புள்ளிகள் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தால் கோரப்பட்டது. இந்த ஒப்பந்தப் புள்ளிகளை பரிசீலனை செய்து, இந்தியாவில் மேற்கு கடற்கரைப் பகுதியின் இம்மாதிரியான திட்டங்கள் முழுமைப்படுத்தப்படவுள்ளதால் அவற்றின் செயல்பாட்டினை கண்டறிந்த பின்னர் தமிழ்நாட்டில் இத்திட்டம் குறித்து எதிர்காலத்தில் புதிய திட்டமாக பரிசீலனை செய்யலாம் என்று பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக இயக்குநருக்கு குழு பரிந்துரை செய்தது. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழக இயக்குநர் குழுவில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதால் மேற்கண்ட குழுவின் முடிவு அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இது குறித்து புதிதாக தகுந்த செயற்குறிப்பு வரும்போது பரிசீலனை செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டது. இது குறித்து புதிதாகத் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(கடிதக் எண். 32100/ஜே.1/95-3, நாள் 14—12—1995.)

19 136/94 உடுக்குறியிட்ட வினா எண். 20308—திரு. வி. தம்புசாமி, எம்.எல்.ஏ., 15—4—1993.

திருவாரூரிலிருந்து நாகூருக்கு செல்லக்கூடிய நகரப் பேரூந்தை பழையவலத்திற்கு காலையில் ஒரு முறையும் மாலையில் ஒரு முறையும் இயக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

கோரிக்கை தடத்தில் பேரூந்துகள் 9—5—1995 முதல் இயக்கப்படுகிறது.

(கடிதக் எண். 32100/ஜே.1/95-3, நாள் 14-12-1995)

| வரிசை எண். | உறுதி மொழி எண். | பார்வை. | பொருள். | அரசு எடுத்துள்ள நடவடிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (6) |
| 20 | 174/95 | உடுக்குறியிட்ட வினா 35122 திரு. மா. சுந்தரதாஸ், எம்.எல்.ஏ. 27—4— 1995. | Whether Poompuhar Shipping Corporation has sught world tenders for equity participation in a joint venture recently? the details thereof. | மூன்று கப்பல்கள் வாங்குவதற்கு கூட்டுத்துறை நிறுவனம் ஒன்றை தனியே அமைப்பதற்கு அரசு அனுமதித்துள்ளது. அமைக்கப்படவிருக்கும் கூட்டுத்துறை நிறுவனத்தில் பங்கேற்பதற்கு உலகளவில் ஒப்பந்தப் புள்ளிகளை பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் கோரியது. இந்த விளம்பரத்தையடுத்து பல்வேறு கப்பல் கழகங்களிலிருந்து 27 விண்ணப்பங்கள் வரப்பெற்றன. அவை ஆய்வு செய்யப்பட்டு அரசின் ஏற்பளிப்பிற்காக அனுப்பப்பட்டது. இந்த மூன்று கப்பல்களை வாங்குவதற்கு எஸ்ஸார் கப்பல் நிறுவனத்துடன் ( Essar Shipping Company ) இணைந்து கப்பல் நிறுவனம் ஒன்றை தனியே அமைப்பதற்கு அரசு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு அனுமதியளித்தது. அதைத் தொடர்ந்து எஸ்ஸார். கப்பல் நிறுவனம் மூலதனத்தில் 89 சதவீதம் பங்குத் தொகையாகவும், பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 11 சதவீதம் பங்குத் தொகையாக முதலீடு செய்வதாக உடன்படிக்கை செய்துகொண்டு எஸ்ஸார். சென்னை கப்பல் போக்குவரத்துக் கழகம் என்ற புதிய கூட்டுத் துறை கப்பல் நிறுவனம் டிசம்பர் 1994-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. |

(கடித எண். 32100/ஜெ.1/95-3, நாள் 14—12—1995.)

## வருவாய்த்துறை

| வரிசை எண். | உறுதி மொழி எண். | பார்வை. | பொருள். | அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய விவரம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 21 | 139/92 | மாவட்ட நிர்வாகம், நிலவரித் துறை பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், முத்திரைத்தாள் நிர்வாகம் பத்திரப்பதிவு, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, எழுதுபொருள் அச்சுத்துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் பதிலுரை, 19—.3—1992. | விவசாயக் கூலி நிர்ணயம் குறித்து. | தமிழ்நாட்டின் ஒரு சில மாவட்டங்களில் மட்டுமே நடைமுறையில் இருந்து வரும் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் நியாய ஊதியச் சட்டம், 1969 (தமிழ்நாடு சட்டம் 19/1969)-ஐ விலக்கிக் கொண்டு தமிழ்நாடு முழுமைக்கும் ஒரே மாதிரியாகக் குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948 (மத்திய சட்டம் 11/1948)-ஐ அமல்படுத்துவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. |

(அ.சா.கு. எண். 7812/எக்ஸ்.1/95-6, நாள் 13—12—1995).

## தென்னாற்காடு வள்ளலார் மாவட்டம்.

### நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 22 | 265/94 | உடுக்குறியிட்ட வினா எண். 21130—திரு. என். ஆர். இராஜேந்திரன், எம்.எல்.ஏ., 3—5—1994. | காட்டுமன்னார் கோயில் தொகுதி, அண்ணாமலை நகரியத்தில் குடிநீர் பற்றாக்குறை உள்ளதை நீக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து. | சிதம்பரம் நகராட்சி மற்றும் அண்ணாமலை நகரியத்திற்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு சூ. 405 லட்சத்திற்கு அரசு ஆணை (நிலை) எண். 219, நகரி.மற்றும் கு.வ. துறை, நாள் 3—11—1995ல் அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன்படி திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (கடிதம் எண். 56957/பி. ப்பி/95-4, நாள் 13—12—1995.) |
| 23 | 5/95 | உடுக்குறியிட்ட வினா எண். 22382..செல்வி கோ. மல்லிகா, எம்.எல்.ஏ., 14—3—1995. | பரங்கிப்பேட்டை ஒன்றியம், கொற்றவன்குடி கிராமத்தில் குடிநீர் மேல்நிலைத் தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து. | பரங்கிப்பேட்டை ஒன்றியத்தைச் சேர்ந்த கொற்றவன்குடி கிராமத்திற்கான 1.00 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டம் 5/95ல் முழுவதுமாக நிறைவேற்றப்பட்டு ஊராட்சி ஒன்றியத்திடம் உடன் ஒப்படைக்கப்பட்டு தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது. (கடிதம் எண். 56957/பி ப்பி/95-4, நாள் 13—12—1995. |
| 24 | 10/95 | உடுக்குறியிட்ட வினா எண். 22938, திரு. என். ஆர். இராஜேந்திரன், எம்.எல்.ஏ., 14—3—1995. | காட்டுமன்னார் கோயில் தொகுதி, குமராட்சி ஒன்றியம், பழைய நல்லூர் கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து. | குமராட்சி ஒன்றியம் பழையநல்லூர் கிராமத்திற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசையிறைப்பான் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. (கடிதம் எண். 56957/பி ப்பி./95-4, நாள் 13-12-95.) |

### தருமபுரி மாவட்டம்.

### உள்துறை.

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 25 | 89/95 | மாநில ஆயுதப்படை தீயணைப்புத் துறை மற்றும் காவல்துறை மாணியக் கோரிக்கைகளின் மதிப்பீட்டு விவாதத்திற்கு முதலமைச்சரின் பதிலுரை 10—4—1995. | தருமபுரி மாவட்டம், போச்சம்பள்ளி விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம், வாணியர் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், மானாமதுரை ஆகிய 3 இடங்களிலும் பயிற்சி தீயணைப்பு நிலையம் அமைக்கப்படுமா என்பது குறித்து. | அரசு ஆணை நிலை எண். 917, நாள் 21—6—1995ல் இந்த மூன்று இடங்களிலும் பயிற்சி தீயணைப்பு நிலையங்கள் திறக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. (அ.சா.கு. எண். 137058/ஜி-1/95-3, நாள் 13—12—1995.) |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 26 | 311/94 | உடுக்குறியிட்ட வினா எண். 33716, திரு. சி. முனிவெங்கடப்பன், எம்.எல்.ஏ., 3—11—1994. | கிருஷ்ணகிரி தொகுதி, கெலமங்கலம் ஒன்றியம், மேல விக்ரஹாரம் பஞ்சாயத்து கடவரஹள்ளி கிராமத்திற்கு பால்வாடி மையம் இல்லை என்பதால் அதை நிர்க்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து. | கிருஷ்ணகிரி ஒன்றியம், கடவரஹள்ளி கிராமத்தில் 1—12—1995 முதல் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தின்கீழ் ஊட்டச்சத்து மையம் ஆரம்பிக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. (நே.மு.க. எண். 27733/எஸ்.டபிள்யு II(1)/95-3, நாள் 13—12—1995) |

சேலம் மாவட்டம்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

| | | | | |
|---|---|---|---|---|
| 27 | 79/95 | உடுக்குறியிட்ட வினா எண். 19984, திரு. கே. சந்தசாமி, சட்டமன்ற உறுப்பினர், 10—4—1995. | சேலம் மாவட்டம், பச்சைமலை ஒடக்காட்டுப்புதூரில் உள்ள ஆதிதிராவிடர் உறைவிட நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா? | சேலம் மாவட்டம், பச்சைமலை ஒடக்காட்டுப் புதூரில் உள்ள ஆதிதிராவிடர் உறைவிட நடுநிலைப் பள்ளி அரசு ஆணை வாலாயம் எண்.166 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், நாள் 10—11—1994ன்படி, 9—1—1995 முதல் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. |

உள்துறை

| | | | | |
|---|---|---|---|---|
| 28 | 86/95 | மாநில ஆயத் தீர்வை, தீயணைப்புத்துறை மற்றும் காவல் துறை மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கு முதலமைச்சரின் பதிலுரை, 19—4—1995. | சேலம் தீயணைப்புக் கோட்டம், இரண்டாகப் பிரித்து தருமபுரியைத் தலைமையிடமாகக் கொண்ட தீயணைப்புக் கோட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து. | 21—7—1995 ஆம் நாளிட்ட உள்துறை அரசாணை நிலை எண். 1098-இல் சேலம் தீயணைப்புக் கோட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு தருமபுரியைத் தலைமையிடமாகக் கொண்ட பதிய தீயணைப்பக கோட்டம் அமைக்க ஆணைகள் வெளியிடப்புட்டுளளன. (அ.சா.கு. எண். 137058/ஜி-1/95-3, நாள் 13—12—1995). |

கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை.

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 29 | 142/95 | பால்வளத்துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை நாள் 19—4—1995. | மேட்டூர் நகரத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ? என்பது குறித்து. |

| (5) | (6) |
|---|---|
| சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம், மேட்டூர் பகுதியில் தற்போது நாள் ஒன்றுக்கு 25,000 லிட்டர் பால் கொள்முதல் செய்து வருகின்றன. மேற்படி பால் சேலம் பால் பண்ணையில் பதப்படுத்தப்பட்டு வருகின்றது. தற்போது மேட்டூர் பால் | துறையின் பதிலை ஆய்ந்த குழு இப்பொருள் குறித்து மேல் நடவடிக்கை தேவையில்லை என முடிவு செய்தது. |

குளிரூட்டும் நிலையம் அமைத்தால் சேலம் பால் பண்ணையில் உள்ள இயந்திர மற்றும் பணியாளர்கள் முழுத் திறனும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும். எனவே, தற்சமயம் மேட்டூரில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

*(அ.சா.கு. எண். 16278/பா.உ. 2/95–3, நாள் 20—11—1995.)*

**30** *171-95* **உடுக்குறியிட்ட வினா எண். 24475, டாக்டர் வே. சரோஜா, எம்.எல்.ஏ., 26—4—1995.**

சங்ககிரி தொகுதி மல்லசமுத்திரம், ஓமலூர், மோஞ்சூர் பஞ்சாயத்து, கூத்தம்பாளையத்தின் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

எஸ்.எம்.டி. 705, கூத்தம்பாளையம் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் தினசரி சராசரியாக 70 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

(அ) சங்கம் கொள்முதல் செய்த 70 லிட்டர் பால் சேலம் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பப்படுகிறது.

(ஆ) இச்சங்கத்தில் உள்ளூர் விற்பனை எதுவும் இல்லை. சங்கம் மகளிர் சங்கமாக பதிவு செய்யப்பட்டு இருப்பதால் மகளிர் மட்டுமே உறுப்பினராக சேர்க்கப்பட்டு தற்போது சங்கத்தில் 100 மகளிர் மட்டும் உறுப்பினர்களாக உள்ளனர்.

சங்க விவகார எல்லையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மலைவாழ் மக்கள் வசிக்கவில்லையாதலால் இவ்வினத்தைச் சேர்ந்த எவரும் உறுப்பினராக இல்லை. மற்றவர்கள் 100 உறுப்பினர்களாக உள்ளனர்.

சங்க உறுப்பினர்களுக்கு கறவை மாட்டுக் கடன் வழங்கப்படவில்லை.

தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம், விதிகள் மற்றும் சங்க துணை விதிகளில் குறிப்பிட்டுள்ள அனைத்து சலுகைகளும் மகளிர் உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது.

*(அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 173/பா.உ.2/95–10, நாள் 20—11—1995.*

## செய்தி மற்றும் சுற்றுலாத்துறை

**31** *321-94* **வினா எண். 4598, திரு. கே. சுந்தரம், எம்.எல்.ஏ., 3—11—1994.**

மேட்டூர் அணையை சுற்றுலாத்தலமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.

மேட்டூர் அணைப்பகுதி ஏற்கனவே சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்துள்ளது. அங்கு வரும் பயணிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்திட சுற்றுலாத்துறை மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் ஒரு உணவு விடுதி மற்றும் 8 தங்கும் அறைகளுடன் கூடிய

வசதி கொண்ட விடுதி ஆயிவை ரூ. 15 லட்சம் செலவில் கட்டப்பட்டு பணிகள் நிறவேற்றப் பட்டு முடியும் தருவாயில் உள்ளன. மேலும் பொதுப்பணித் துறை மூலமாக ஸ்டான்லி அணையின் மேல்பகுதி மற்றும் கீழ்ப்பகுதியில் பழுதுகள் சரி செய்யப்பட்டு புதிய நீர் குழாய்கள் அமைக்கப் பட்டுள்ளன. குழந்தைகள் பூங்காவிலும் ஸ்டான்லி அணையின் மேல்பகுதியிலும் குடிநீர் தொட்டி அமைக்கப்பட்டுள்ளன. ஆண்/பெண் கழிப்பிட வசதி பணி முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(அ.சா.கு. எண். 38589/ட்டி.3/95-3, நாள் 13—12—1995.)

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை.

32 198/94 உடுக்குறியிடாத வினா எண். 9547, திரு. வெ. தமிழழகு, எம்.எல்.ஏ., 11—4—1994. சேலம் மாவட்டம், ஆத்தூர் முல்லை வாடி தரைபாலம் எப்போது செயல் படுத்தப்படும் என்பது குறித்து.

போக்குவரத்துத் துறை

33 184/95 உடுக்குறியிட்ட வினா எண். 35991, திருமதி ப. சரஸ்வதி, எம்.எல்.ஏ., 2..5..1995. பரமத்தியில் உள்ள பறம்போக்கு இடத்தில் அண்ணா போக்குவரத்துக் கழக பணிமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு குறித்து.

பரமத்தி வேலூர் வட்டம், பொத்தனூர் கிராமத்தில் அண்ணா போக்குவரத்துக் கழக பணிமனை அமைப்பதற்காக சுமார் 5.24 ஏக்கர் பரப்புள்ள அருள்மிகு மாரியம்மன் கோவில் நிலத்தினை இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினரிடம் பரா தனம் மூலம் கேட்டு விண்ணப்பிக்கப்பட்டது. இந்நிலத்தின் விலை மதிப்பு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 4.50 இலட்சம் என ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை அவர்கள் நிர்ணயித்தார்கள். பின்னர் அங்காவலர் குழுத் தலைவர் பொத்த னூர் அவர்களால் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3.00 இலட்சத்திற்கு அண்ணா போக்குவரத்துக் கழகத் திற்கு விற்கலாமென உதவி ஆணையர், இந்து சமய அறநிலையத்துறை அவர்கட்குத் தெரிவிக் கப்பட்டது. தலைவர், கோவில் அறங்காவலர் குழு,பொத்தனூர் அவர்கள் மேற்படி நிலத்தினை ரூ. 4.50 இலட்சத்திற்கு அண்ணா போக்குவரத்துக் கழகத்திற்கு விற்கலாமென புதிய தீர்மானம் நிறவேற்றி அண்ணா போக்குவரத்துக் கழகத்திற்கு மறு படியும் தெரிவித்தார்கள். மேற்படி விலை விபரங்கள் அனைத்தையும் அண்ணா போக்குவரத்துக் கழக நிர்வாக குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. 122-வது நிர்வாகக் குழுக் கூட்டத்தில் மேற்படி நிலம் கையகப்படுத்தல் செயற்குறிப்பினை கைவிடுமாறு தீர்மானிக்கப்பட்டு பரமத்தி வேலூர் அருகில் பணிமனை அமைக்க வேறு நிலத்தினை தேர்வு செய்யுமாறு தீர்மானிக்கப் பட்டது. இத்தீர்மானத்திற்கிணங்க, பொத்தனூர் நிலம் குறித்த நடவடிக்கை

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| | | | | களை கைவிட்டு, பரமத்தியில் பணிமனை அமைக்க நிலம் தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தற்போது, ஆண்ணா போக்குவரத்துக கழகப் பணிமனை அமைப்பதற்காக பரமத்தி வேலூர் வட்டம், பரமத்தி கிராமத்தில் புல எண். 237-1ல் சுமார் 5.00 ஏக்கர் தோப்பு புறம்போக்கு நிலத்தினை (ஆதிகள் மூகாம் அருகில்) தேர்வு செய்யப்பட்டு, 18—3—1995-ல் தடைபெற்ற ஆண்ணா போக்குவரத்துக் கழக நிர்வாகக் குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டு, மேற்படி நிலத்தினை ஆண்ணா போக்குவரத்துக் கழகத்திறகு பராதினம் மூலம் ஒப்படைக்குமாறு மாவட்ட ஆட்சியர், சேலம் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். |

(கடித எண். 32100/ஜே.1/95-3, நாள் 14—12—1995.)

## வருவாய்த் துறை.

| | | | | |
|---|---|---|---|---|
| 34 | 105/92 | உடுக்குறியிடாத வினா எண். 379, திரு. வெ. தமிழரசு, எம்.எல்.ஏ., 16—3—1992. | பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியம், ஆரியபாளையம் ஒன்றியம், புல எண். 38/3 மற்றும் 143/2ல் உள்ள 3.26.5 ஹெக்டேர் மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தினை உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்ட கல்வித்துறைக்கு மாற்ற நில நிர்வாக ஆணையரிடமிருந்து செயற்குறிப்பு பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. | சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், பெத்த நாயக்கன்பாளையம் ஒன்றியம், ஆரியபாளையம் கிராமம், புல எண். 38/3 மற்றும் 143/2ல் உள்ள 3.26.5 ஹெக்டேர் மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தினை உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்ட கல்வித்துறைக்கு மாற்ற நில நிர்வாக ஆணையரிடமிருந்து செயற்குறிப்பு பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. |

(அ.சா.கு. எண். 7812/எக்ஸ்.1/95-6, நாள் 13—12—1995.)



வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு 2.

அளிக்கப்பெற்ற உறுதிமொழிகள் அவற்றுள் நிறைவேற்றப் பெற்றவை/படித்துப் பதிவு செய்யப் பெற்றவை மற்றும் நிலுவையில் உள்ள உறுதிமொழிகள் குறித்த ஆண்டு வாரியான பட்டியல்.

| ஆண்டு. | அளிக்கப்பெற்ற உறுதி மொழிகள். | நிறைவேற்றப் பெற்றவை/ படித்துப் பதிவு செய்யப் பெற்றவையாக கருதப்பெற்றவை. | நிலுவையில் உள்ளவை. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1983 .. .. | 335 | 334 | 1 |
| 1984 .. .. | 274 | 274 | .. |
| 1985 .. .. | 461 | 458 | 3 |
| 1986 .. .. | 681 | 677 | 4 |
| 1987 .. .. | 635 | 621 | 14 |
| 1989 .. .. | 390 | 383 | 7 |
| 1990 .. .. | 548 | 535 | 13 |
| 1991 .. .. | 376 | 360 | 15 |
| 1992 .. .. | 480 | 447 | 33 |
| 1993 .. .. | 747 | 673 | 72 |
| 1994 .. .. | 360 | 249 | 111 |
| 1995 .. .. | 231 | 42 | 189 |
| | | | 462 |

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு—5.

நிறுவையிலுள்ள உறுதிமொழிகள் குறித்த துறைவாரியான மற்றும் ஆண்டு வாரியான பட்டியல்.

| வரிசை எண்ணும் துறையும். | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 | மொத்தம். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 1 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை | .. | .. | .. | .. | .. | .. | 1 | 1 | 5 | 2 | 5 | 7 | 21 |
| 2 உள்துறை | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | 4 | 3 | 16 | 24 |
| 3 ஊரக வளர்ச்சித் துறை | .. | .. | .. | .. | 1 | .. | 1 | .. | 2 | 5 | 6 | 9 | 24 |
| 4 கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறை | .. | .. | .. | .. | 1 | .. | .. | 1 | 3 | 3 | 12 | 8 | 28 |
| 5 கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத்துறை | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | 3 | 5 | 2 | 5 | 16 |
| 6 கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 4 | 5 |
| 7 கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணி நூல் மற்றும் கதர்த்துறை | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 2 | .. | 9 | 11 |
| 8 சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 2 | 4 | 4 | 10 |
| 9 சட்டத்துறை | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 1 |
| 10 சட்டமன்றப் பேரவைச் செயலகம் | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 11 சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத்துறை | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 3 | 5 | 8 |
| 12 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை | .. | .. | .. | .. | 2 | 1 | 1 | 1 | 2 | 1 | 2 | 7 | 17 |
| 13 தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 1 |
| 14 திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 15 தொழில் துறை | .. | .. | .. | .. | 1 | .. | .. | 2 | 1 | .. | 1 | 3 | 8 |
| 16 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 2 | 3 | 2 | 7 |

தமிழ்நாடு சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 17 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | .. | .. | .. | 2 | 3 | 1 | 2 | .. | 5 | 10 | 3 | 11 | 37 |
| 18 நிதித் துறை | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 2 | 2 |
| 19 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. |
| 20 பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத்துறை | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 1 |
| 21 பொதுத் துறை | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | 1 | .. | 2 |
| 22 பொதுப்பணித் துறை | .. | .. | 2 | 2 | 6 | 2 | 5 | 6 | 8 | 21 | 40 | 31 | 123 |
| 23 போக்குவரத்துத் துறை | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 2 | 7 | 13 | 22 |
| 24 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 5 | 4 | 9 | 18 |
| 25 மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறை | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 1 |
| 26 வணிகவரி மற்றும் பதிவுத்துறை | 1 | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | 3 | 7 | 12 |
| 27 வருவாய்த் துறை | .. | .. | 1 | .. | .. | 1 | 1 | 2 | 1 | 2 | 7 | 11 | 26 |
| 28 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | .. | .. | .. | .. | .. | 1 | .. | .. | 1 | 2 | 1 | 8 | 13 |
| 29 வேளாண்மைத் துறை | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | 2 | 2 | 10 | 15 |
| 30 எரிசக்தித் துறை | .. | .. | .. | .. | 1 | .. | .. | .. | .. | 1 | 1 | 2 | 5 |
| 31 சிறு தொழில் துறை | .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | 1 | .. | 2 | 4 |
| மொத்தம் .. | 1 | .. | 3 | 4 | 14 | 7 | 13 | 15 | 33 | 72 | 111 | 189 | 462 |

இணைப்பு—4.

(அறிக்கை பத்தி 4)

குழு கூடிய நாட்கள் பற்றிய விவரம்,

| நாள், (1) | குழுக்கூட்டம் நடைபெற்ற இடம், (2) |
|---|---|
| 29—06—1995 | சென்னை, |
| 24—07—1995 | திருநெல்வேலி-கட்டபொம்மன், |
| 25—07—1995 | கன்னியாகுமரி, |
| 26—07—1995 | சிதம்பரனார் |
| 27—07—1995 | |
| 28—07—1995 | |
| 23—08—1995 | |
| 24—08—1995 | புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர். |
| 25—08—1995 | |
| 11—09—1995 | சென்னை |
| 12—09—1995 | செங்கை-எம்.ஜி.ஆர், |
| 25—09—1995 | நீலகிரி |
| 26—09—1995 | கோவை |
| 27—09—1995 | பெரியார் |
| 04—10—1995 | சென்னை |
| 05—10—1995 | |
| 10—10—1995 | திண்டுக்கல்-அண்ணா |
| 11—10—1995 | மதுரை |
| 12—10—1995 | காமராஜர் |
| 13—10—1995 | இராமநாதபுரம். பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர், |
| 25—10—1995 | வட ஆற்காடு-அம்பேத்கார், |
| 26—10—1995 | திருவண்ணாமலை-சம்புவராயர், விழுப்புரம் இராமசாமி படையாச்சியார், |
| 14—11—1995 | நாகை காயிதே மில்லத் |
| 15—11—1995 | தென்னாற்காடு வள்ளலார் |
| 23—11—1995 | தருமபுரி |
| 24—11—1995 | சேலம் |
| 13—12—1995 | |
| 14—12—1995 | சென்னை |
| 15—12—1995 | |

இணைப்பு—5.

நிறைவேற்றப்பெற்ற/படித்துப் பதிவு செய்யப்பெற்ற உறுதிமொழிகள்/சதவீதம்.

| வரிசை எண். | ஆண்டு. | நிலுவையாக உள்ள உறுதிமொழிகளின் எண்ணிக்கை. | | | நிறைவேற்றப்பெற்ற/படித்துப் பதிவு செய்யப் பெற்ற உறுதிமொழிகள். | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண்டுத் தொடக்கத்தில். | மேலும் சேர்த்துக் கொள்ளப் பட்டவை. | மொத்தம். | ஆண்டு இறுதியில். | எண் | சதவீதம். |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | |
| 1 | 1989 | 1 655 | 721 | 2 376 | 1,835 | 541 | 23 |
| 2 | 1990 | 1 825 | 97 | 2 332 | 1,565 | 767 | 32.9 |
| 3 | 1991 | 1,565 | 375 | 1,940 | 1,186 | 754 | 38 |
| 4 | 1992 | 1,186 | 890 | 2 076 | 1,041 | 1,035 | 49.9 |
| 5 | 1993 | 1,041 | 521 | 1 562 | 433 | 1,129 | 72.3 |
| 6 | 1994 | 474 | 318 | 792 | 331 | 461 | 58 |
| 7 | 1995 | 347 | 231 | 578 | 462 | 116 | 20 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சட்டமன்றப் பேரவைச் செயலகம்

அரசு உறுதிமொழிக் குழு

1995-96 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்தி மூன்றாவது அறிக்கையின் பிழையும், திருத்தமும்.

| பக்கம் | பத்தி | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| v | 5 | 13 | பெற்றுள்ள | பெற்றன |
| v | 7 | 2 | சுகாரதாரக்கேடு | சுகாதாரக்கேடு |
| v | 7 | 5 | செய்கூறு | செய்கிறது |
| v | 7 | 7 | T eatment | Treatment |
| vi | 9 | 4,5 | பெட்சிலின் | பெட்சின் |
| vi | 9-ல் கிளை பத்தி | 1 | நடவடிக்கைகள் | நடவடிக்கைகள் |
| 2 | வரிசை எண்.4-ல் பத்தி 4 | 3 | முநிலையத் | அறநிலையத் |
| 9 | வரிசை எண்.25-ல் பத்தி 3 | 2 | மதான | மீதான |
| 10 | வரிசை எண்.26-ல் பத்தி 4 | 2 | விக்ரஉறராம் | அக்ரஉறாரம் |
| 11 | வரிசை எண்.30-ல் பத்தி 5 | 17 | கட | கடன் |
| 51 | -- | -- | 51 | 15 |

செ.சு.ஜானகிராமன்
செயலாளர்.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS